*8*

# விசுவாசத்தின் இயல்பு

## (அதிகாரம் 11)

*எபிரெயருக்கு எழுதிய நிருபம் யாருக்கு எழுதப்பட்டதோ, அந்த மக்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்வில் மரணத்திற்கு ஏதுவான அறைகூவல் ஒன்றை எதிர்கொண்டிருந்தனர்: அவர்கள் தேவனை விட்டுப் புறம்பே விழுந்து போகும் மரண அபாயத்தில் இருந்தனர். 10ம் அதிகாரத்தின் பிற்பகுதியில் எழுத்தாளர், இந்த அபாயத்தை நேரடியாகக் கையாண்டு, தமது வாசகர்கள் புறம்பே விழுந்து போனால் என்ன நடைபெறும் என்பதைப் பற்றி எச்சரித்திருந்தார் (10:26-31) மற்றும் அவர்கள் விடாமுயற்சியுடன் இருப்பார்கள் என்று உண்மையிலேயே தாம் நம்பியதாகக் கூறியதன் மூலம் அவர்களை ஊக்கப்படுத்தினார். பின்பு அவர் தமது நிருபத்தின் அப்பகுதியைப் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு முடித்தார்: "நாமே கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்" (10:39).*

*இந்தக் கிறிஸ்தவர்கள் நித்தியத்திற்கு இரட்சிக்கப்பட்டவர்களாய் இருக்கும் பொருட்டு, அவர்கள் விழுந்து போகாமல் இருப்பதைத் தவிர்க்கும்படி அவர்கள் என்ன செய்ய வேண்டியதாய் இருந்தது? விசுவாசம்! நாம் விசுவாச விலக்கம் செய்யாதிருக்கும்படி விசுவாசமும் நமக்கு அவசியமாயிருக்கிறது.*

*கிறிஸ்தவருடைய முற்றான இரட்சிப்புக்கு விசுவாசம் திறவுகோலாக இருக்கிறது என்று இதன் எழுத்தாளர் அறிவித்த நிலையில் "விசுவாசம்" என்றால் என்ன என்றும் அது அர்த்தப்படுத்துவது என்ன என்றும் அவர் செயல்விளக்கப்படுத்துகிறார். அவர் அந்த முடிவிற்கு இயல்பைப் பற்றிய பிரசங்கம் ஒன்றைப் பிரசங்கித்தார். அவரது பிரசங்கத்தை நாம் வாசித்து, விசுவாசத்தின் இயல்பைப் பற்றிப் பரிசுத்த ஆவியானவர் என்ன கூறினார் என்பதைக் கற்றுக் கொள்வோமாக!*

### விசுவாசம் என்பது உடல்ரீதியாகக் காண இயலாதவற்றை ஏற்றுக்கொள்கிறது

*உடல்ரீதியான புலன்களைக் கொண்டு அனுபவிக்கப்பட இயலாதவற்றை உண்மையென்று ஏற்றுக்கொள்வதை விசுவாசம் உள்ளடக்குகிறது என்பதே, விசுவாசத்தின் இயல்பைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளும் முதல் சத்தியமாக உள்ளது. எபிரெயர் 11:1, 2 வசனங்கள் இந்த அதிகாரத்தின் ஆய்வுக் கொள்கையை அமைக்கிறது: "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சிபெற்றார்கள்."*

*சிலவேளைகளில் நாம், எபிரெயர் 11:1ம் வசனம் "விசுவாசம்" பற்றிய*

விளக்கம் ஒன்றைத் தருகிறது என்ற வகையில் பேசுகிறோம். இது நுட்பமாக உண்மையில் ஒரு விளக்கமாக இருப்பதில்லை, ஏனென்றால் ஒரு விளக்கம் என்பது அது விளக்கப்படுத்தும் வார்த்தையை மட்டுப் படுத்துகிறது. இருப்பினும் ஒருவர், "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என்று கூறியிருக்கையில் அவர் "விசுவாசம்" என்பதன் அர்த்தம் பற்றிக் கூற வேண்டிய யாவற்றையும் கூறியிருப்பதில்லை. ஆகையால் இவ்வசனம், "தேவன்" என்ற வார்த்தைக்கு விளக்கம் என்ற வகையில் "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்ற கூற்றைக் காட்டிலும், "விசுவாசம்" என்ற வார்த்தைக்கு அதிகமான விளக்கமாக இருப்பதில்லை. தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பதில், அன்பு என்பது அவரது இயல்புகளின் ஒரு பண்பாக உள்ளது; ஆனால் அதுவே அவரது இருப்பின் எல்லாமுமாக இருப்பதில்லை. அவ்வாறே, "விசுவாசம்" என்பது காணப்படாதவற்றை ஏற்றுக்கொள்வதாக இருக்கையில், அதுவே விசுவாசம் பற்றிய எல்லாமுமாக இருப்பதில்லை.

இருந்தபோதிலும், எபிரெயர் 11:1ல் ஏற்படுத்தப்பட்ட உறுதிப்பாடு, இந்த அதிகாரத்தின் முதன்மைக் கருத்தாக உள்ளது. விசுவாசத்தைக் கொண்டிருத்தல் என்பது, ஆவிக்குரிய உண்மை நிலைகளை ஒருவர் தமது உடல்ரீதியான உணர்வுகளைக் கொண்டு உண்மையாகக் காண இயலாதிருந்தாலும், அவைகள் உள்ளன என்ற அவரது விசுவாசத்தின் மீது செயல்படுதல் என்று அர்த்தப்படுகிறது.

உண்மையான வாழ்வில் அது அர்த்தப்படுத்துவது என்ன? செயல் விளைவில் எழுத்தாளர், "நான் உங்களுக்குக் காண்பிப்பேன். தங்களுடைய விசுவாசத்தினால் தெய்வீக அங்கீகாரத்தை பெற்றுக் கொண்ட முன்னோர்களை பயன்படுத்துவதன் மூலம் விசுவாசத்தின் இயல்பைச் செயல்விளக்கப்படுத்த என்னை அனுமதியுங்கள்" என்றே கூறினார். பின்பு அவர் வேதாகமத்தினூடே (பழைய ஏற்பாட்டினூடே) இழையோடி, ஒருவருக்குப்பின் இன்னொருவராக, விசுவாசத்தின் மாபெரும் வீரர்களை நமது கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

3 ம் வசனத்தில் விசுவாசத்தின் இயல்பு பற்றிய முதல் விவரிப்பு வருகிறது: "விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினாலே உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்." இந்த உலகம் எவ்வாறு தோன்றியது? நாம் அங்கு இருக்கவில்லை, மற்றும் அது உண்டாக்கப்பட்டதை நாம் கண்டிருக்கவில்லை; ஆனால் அதைத் தேவனே உண்டாக்கினார் என்று நாம் விசுவாசம் கொண்டிருக்கிறோம். உடல் உணர்வுகளின் வழியாக நாம் அறிய இயலாதவற்றை ஒரு உண்மை என்ற வகையில் நாம் ஏற்றுக்கொள்கிறோம், எனவே தேவன் அதை உண்டாக்கினார் என்று "விசுவாசத்தினால்" நாம் புரிந்துகொள்கிறோம். பின்பு நாம், விசுவாசத்தின் இயல்புக்குச் சாட்சியங்கள் என்ற வகையில், வேதாகமத்தில் இருந்து மாபெரும் உதாரணங்களின் பட்டியல் ஒன்றை காணுகிறோம்.

## விசுவாசம் என்பது நாம் தேவனைப் பிரியப்படுத்தும்படி செய்கிறது

விசுவாசம் என்பது நாம் தேவனைப் பிரியப்படுத்துபவர்களாக இருக்கக்

*காரணமாகிறது என்பது, விசுவாசத்தின் இயல்பைப் பற்றி கற்றறிகிற இரண்டாவது சத்தியமாக உள்ளது. (எபிரெயர் 11:4-7ஐ வாசிக்கவும்.) வேதவசனங்களினூடே எழுத்தாளர் தொடருகையில், ஆதியாகமம் 4ல் இருந்து ஆபேலைப் பற்றி அவர் கூறினார். பின்பு அவர் ஏனோக்கு (ஆதியாகமம் 5) மற்றும் நோவா (ஆதியாகமம் 6) ஆகியோரைப் பற்றிக் குறிப்பிட்டார். இவர்கள் யாவரும் தேவனைப் பிரியப்படுத்தினர் என்று கூறப்பட்டுள்ளது, மற்றும் அவர்கள் விசுவாசம் கொண்டிருந்தனர் என்பதே ஏவுதல் பெற்ற முடிவாக உள்ளது: "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" (11:6). இவ்வசனம் நமக்கு மிகவும் முக்கியமானதாக உள்ளது! விசுவாசத்தின் இவ்விரு கூறுகள் இன்றி நாம் தேவனைப் பிரியப்படுத்த இயலாது: தேவன் இருக்கிறார் என்று விசுவாசித்தல் மற்றும் தேவன் பலன் அளிக்கிறார் என்று விசுவாசித்தல்! விசுவாசம் என்பது கிறிஸ்தவர் ஆவதற்கு அவசியமானதாக உள்ளது, மற்றும் விசுவாசம் என்பது கிறிஸ்தவர் என்ற வகையில் வாழ்வதற்கும் அவசியமானதாக உள்ளது.*

## விசுவாசம் கீழ்ப்படிகிறது

*விசுவாசம் கீழ்ப்படிகிறது என்பது விசுவாசத்தின் இயல்பைப்பற்றிக் கற்றறிகிற முன்றாவது சத்தியமாக இருக்கிறது. (எபிரெயர் 11:8-12ஐ வாசிக்கவும்.) ஆபிரகாம் ஏன் "விசுவாசிகளின் தகப்பன்" என்று கருதப்படுகிறார்? அவர் கீழ்ப்படிந்தார் என்பதால்தான் (11:8)! ஒருவேளை ஆபிரகாமின் கீழ்ப்படிதலான, தேவனுடைய கட்டளையின்பேரில் ஈசாக்கைப் பலியிட விருப்பமுடன் இருந்த ஆபிராமின் மேன்மையான உதாரணம் 11:17-19ல் கூறப்பட்டிருக்கிறது. என்ன ஒரு மாபெரும் விசுவாசம்! நமது விசுவாசம் எவ்வாறு ஒப்பிடப்படுகிறது? இந்த அதிகாரம் முழுவதிலும் வலியுறுத்தப்பட்டபடி, விசுவாசம் என்பது செயல் விளைவற்றதாக இருப்பதில்லை! அது செயல்துடிப்புள்ளதாக இருக்கிறது. அது கீழ்ப்படிதலாக உள்ளது! விசுவாசம் எவற்றைச் செய்தது என்பதைக் கவனியுங்கள்:*

*விசுவாசத்தினாலே ஆபேல் பலியை செலுத்தினான் … (வசனம் 4).*
*விசுவாசத்தினாலே நோவா பேழையை உண்டுபண்ணினான் … (வசனம் 7).*
*விசுவாசத்தினாலே ஆபிரகாம் கீழ்ப்படிந்து … (வசனம் 8).*
*விசுவாசத்தினாலே ஆபிரகாம் பலியாக ஒப்புக்கொடுத்தான் … (வசனம் 17).*
*விசுவாசத்தினாலே ஈசாக்கு ஆசீர்வதித்தான் … (வசனம் 20).*
*விசுவாசத்தினாலே யாக்கோபு ஆசீர்வதித்து … (வசனம் 21).*
*விசுவாசத்தினாலே மோசேயினுடைய தாய்தகப்பன்மார் அவனை ஒளித்துவைத்தார்கள் … (வசனம் 23).*
*விசுவாசத்தினாலே மோசே வெறுத்து … (வசனம் 24).*
*விசுவாசத்தினாலே மோசே பஸ்காவை ஆசரித்தான் … (வசனம் 28).*
*விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தை … கடந்துபோனார்கள்*

(வசனம் 29).

விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ... விழுந்தது (வசனம் 30).

விசுவாசத்தினாலே ராகாப் வேவுகாரரை ஏற்றுக்கொண்டு ... (வசனம் 31).

நீங்கள் விசுவாசம் கொண்டிருக்கிறீர்களா? இதற்கான பதிலானது, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதிலோ, உங்கள் எண்ணப்போக்கிலோ அல்லது நீங்கள் எவ்வாறு உணருகிறீர்கள் என்பதிலோ இருப்பதில்லை. மாறாக இது, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதிலேயே உள்ளது! நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால், நீங்கள் தேவன் மீது விசுவாசம் உள்ளவர்களாகச் செயல்பட்டால், அப்போது நீங்கள் விசுவாசம் உள்ளவர்களாக இருக்கிறீர்கள். இல்லையென்றால் நீங்கள் விசுவாசம் உள்ளவர்களாக இருப்பதில்லை.

## விசுவாசம் நிறைவான பலனை முன் எதிர்நோக்குகிறது

விசுவாசம் நிகழ்காலச் சூழ்நிலைகளுக்கு அப்பால் நிறைவான பலனை எதிர்நோக்குகிறது என்பது நாம் கற்றறியும் நான்காவது சத்தியமாக உள்ளது. விசுவாச வீரர்கள் தங்கள் எதிர்பார்ப்புகளின் நிறைவேற்றத்தை இந்த வாழ்வில் காணவில்லை என்ற உண்மையே, 11:13-22ன் வலியுறுத்தமாக உள்ளது. ஆபிரகாமுக்கு ஒரு நாடு வாக்குத்தத்தம் செய்யப்பட்டது, ஆனால் அவர் வாழ்ந்த காலத்தில் ஒருபோதும் அவர் அதைப் பெற்றிருக்கவில்லை. யாக்கோபு மற்றும் ஏசா ஆகியோர் மீது, ஈசாக்கு ஆசீர்வாதங்களை நாடி வேண்டினார், ஆனால் அந்த ஆசீர்வாதங்கள் வந்து சேர்ந்ததைக் காண அவர் உயிரோடு இருக்கவில்லை. யாக்கோபு தமது பிள்ளைகளை ஆசீர்வதித்தார், அந்த ஆசீர்வாதங்கள் உணர்ந்தறியப்படுதலை அவர் எதிர்பார்த்தார்; ஆனால் அவற்றின் நிறைவேற்றத்தை அவர் இந்த வாழ்வில் ஒருக்காலும் காணவில்லை. யோசேப்பு, தாம் கானான் தேசத்தில் புதைக்கப்பட வேண்டும் என்பதை எதிர்பார்த்து அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார் என்ற உண்மையினால், ஒருநாளில் இஸ்ரவேல் மக்கள் எகிப்தை விட்டு வெளியேறுவார்கள் என்று எதிர்பார்த்தார் என்பது தெளிவு; ஆனால் அந்த எதிர்பார்ப்பு உண்மை நிலையாவதற்கு முன்னர் அவர் மரித்தார்.

அப்படியானால் “விசுவாசம்” என்பது என்ன? அது நிகழ்காலத்திற்கு அப்பால், நம்பிக்கையின் எதிர்கால நிறைவேற்றத்தைக் காணுகிறது. நாம் முற்பிதாக்களைப் போன்றிருந்தால் (வசனங்கள் 13-16), அவர்களை ஆசீர்வதித்தது போலவே நம்மையும் தேவன் ஆசீர்வதிப்பார் என்று விசுவாசிக்கிறோம். (அவர்கள் “வாக்குத்தத்தங்களைப் பெற்றனர்”; வசனம் 17; காண்க வசனம் 33.)

## விசுவாசம் நாம் ஞானமான முடிவுகளை மேற்கொள்ள நமக்கு உதவுகிறது

விசுவாசம் நாம் கடினமான முடிவுகளை மேற்கொள்ளும்போது, மிகச்சிறந்தவற்றைத் தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள் ஆக்குகிறது என்பது நாம் கற்றறிகிற ஐந்தாவது சத்தியமாக உள்ளது. (எபிரெயர் 11:23-28ஐ

வாசிக்கவும்.) மோசேயின் பெற்றோர்கள், தங்கள் பிள்ளையைக் கொல்வதா அல்லது அவரை ஒளித்து வைப்பதா என்பவற்றில் ஒன்றை முடிவு செய்ய வேண்டியிருந்தது. மோசே தாம் பார்வோன் வீட்டாருடன் இருப்பதா அல்லது அடிமைத்தளையில் இருந்த மக்களுடன் இணைத்து கொள்வதா என்பவற்றில் ஒன்றை முடிவு செய்ய வேண்டியதாயிருந்தது. இஸ்ரவேல் மக்கள், தேவன் பத்தாவது வாதையை அனுப்பியபோது, தாங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து தங்கள் வீடுகளின் கதவு நிலைகளிலும் மேல் விட்டங்களிலும் இரத்தத்தைத் தெளிப்பதா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டி இருந்தது. பின்பு அவர்கள் தேவனுடைய கட்டளையின்படி செங்கடலை நோக்கி அணிவகுத்து செல்வதா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டி இருந்தது. இவைகள் கடினமான முடிவுகளாக இருந்தன! இருப்பினும் மக்கள் சரியானவற்றைத் தேர்வு செய்தனர்! அவர்கள் தங்கள் முடிவுகளை மேற்கொள்ளச் செய்தது எது? அது விசுவாசமாகவே - பலனில் கொண்டிருந்த விசுவாசமாகவே - இருந்தது! உதாரணமாக, மோசே "அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும்" "தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டார்" ஏனெனில் அவர் "இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தார்" (11:25, 26).

நாம் கடினமான தீர்மானங்களை எதிர்கொள்ளும்போது, இன்றைய நாட்களில் இதே வகையான விசுவாசத்தைக் கொண்டிருக்கவேண்டும்! "நான் உண்மையாகவே ஒரு ஊழியக்காரனாக ஊழியம் செய்ய முடியுமா?"; "நான் உண்மையாகவே, ஒழுக்கமின்மையைத் தவிர்த்து பரிசுத்தவானாக நிலைத்திருக்க முடியுமா?"; "பணத்தை நேசிப்பதையும் இன்பத்தை ஆராதிப்பதையும் போன்ற உலகத்தின் சோதனைகளை மறுக்க முடியுமா?" சரியான தீர்மானத்தை செய்வதற்கு, விசுவாசம் - வெகுமதியை எதிர்நோக்கும் விசுவாசம் - நமக்கு அவசியம்!

## விசவாசம் நம்மை வெற்றிகொள்ளக் கூடியவர்கள் ஆக்குகிறது

நாம் தேவன்மீது சார்ந்திருக்கும்போது, எல்லாத் தடைகள் மீதும் நாம் வெற்றிகொள்கிறோம் என்பது, விசுவாசத்தின் இயல்பு பற்றி நாம் கற்றுக்கொள்ளும் ஆறாவது சத்தியமாக உள்ளது. 11:29-31ல் தரப்பட்டுள்ள முதல் மூன்று உதாரணங்கள் விசேஷமாகக் குறிப்பிடத் தக்கவைகளாக உள்ளன. இஸ்ரவேல் மக்கள், எல்லா எதிர்பார்ப்பிற்கும் எதிராக எகிப்தில் இருந்து தப்பித்தனர். எரிகோ (மனித தர்க்கரீதியாக) இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக விழவேண்டியதில்லை என்றாலும்கூட, எரிகோவின் மதில்கள் கீழே வீழ்ந்தன. ராகாப் என்ற ஒரு தனிநபர், தேவனுடைய உதவியுடன் இஸ்ரவேல் மக்கள் அவளது சொந்த ஜனங்களை வெற்றிகொள்ளக் கூடியவர்களாக இருந்தனர் என்று விசுவாசித்ததால் மாத்திரமே, அவளது குடும்பத்திற்கு ஒரு வெற்றியை வென்றாள். வெல்வதற்கு அரிதாகக் காணப்படும் தடைகளுக்கு எதிராக, விசுவாசத்தின் மூலமாக வெற்றி வருகிறது.

இருப்பினும், நமது சொந்த பலத்தின் மூலமாக வெற்றி வருவதில்லை: தேவனுடைய பலத்தின் மூலமாகவே அது வருகிறது! நாம் விசுவாசத்தில்

விசுவாசம் கொண்டிருக்கத் தேவையில்லை; நாம் தேவன் மீது விசுவாசம் கொண்டிருப்பதே தேவையாக உள்ளது! இஸ்ரவேல் மக்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றிகள், தேவனுடைய மக்களின் பலத்தினால் அல்ல, ஆனால் தேவனுடைய பலத்தினாலேயே பெறப்பட்டன!

அடுத்த சில வசனங்கள், விசுவாசத்தின் மூலமாக வெற்றி வருகிறது என்ற கருத்தைத் தொடருகின்றன. (வாசிக்கவும் எபிரெயர் 11:32-35அ.) இஸ்ரவேல் வரலாற்றில் மகிமையுள்ள கணங்கள் யாவும், இஸ்ரவேல் மக்கள் தங்கள் மீட்பிற்குத் தேவனைச் சார்ந்திருந்ததின் விளைவாக இருந்தன!

பின்பு மனநிலை மாறுகிறது. 11:35ஆ-38 வசனப்பகுதியில் நாம், பூமிக்குரிய வெற்றிகள் எதையும் கண்டறிவது இல்லை. இந்த மக்கள் வெற்றியாளர்களாக இருந்தனர் என்று நாம் எப்படி நினைக்க முடியும்? அவர்கள் வெற்றியாளர்களாக இருக்கவில்லை, குறைந்தபட்சம் இந்த வாழ்வில் அவர்கள் வெற்றியாளர்களாக இருக்கவில்லை! இருப்பினும் அவர்கள் இன்னொரு வாழ்வில் வெற்றியாளர்களாக இருந்தனர் (அல்லது இருப்பார்கள்)! நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்,

> இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே, நற்சாட்சிபெற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார் (11:39, 40).

இதிலிருந்து நாம், தேவனுடைய வல்லமையில் கொண்டுள்ள விசுவாசத்தினால் வெற்றி என்பது எப்போதுமே இந்த வாழ்வில் வெற்றி என்று அர்த்தப்படுவது இல்லை - ஆனால் அது எப்போதுமே வெற்றியாகவே உள்ளது என்று கற்றறிய முடியும்! நமது நிறைவான, முக்கியமான வெற்றி பரலோகத்தில் உள்ளது!

## முடிவுரை

எபிரெயர் 11:39, 40 வசனப்பகுதி, நமது யுகத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது. நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றமும் கிறிஸ்துவின் வருகையும் இன்றி, விசுவாசத்தின் மாபெரும் வீரர்கள் பூரணப் படுத்தப்பட இயலாதிருந்தனர். மேலும் இவ்வசனங்கள், பழைய ஏற்பாட்டின் இந்த மாபெரும் வீரர்களுடன் புகழ்பெற்ற தேவனுடைய விசுவாச அறை வீட்டில் நாமும் ஒரு இடத்தைக் கொண்டிருப்போம் என்று கருத்துத் தெரிவிக்கிறது!

மோசே தமது தெரிவுசெய்தல்களின் நிமித்தம் அங்கிருப்பார், மற்றும் நீங்களும்கூட உங்களின் தெரிவுசெய்தல்களின் நிமித்தம் அங்கு இருப்பீர்கள். ஆபிரகாம் தமது கீழ்ப்படிதலின் நிமித்தமாக அங்கு இருப்பார், மற்றும் ஒருவேளை நீங்களும் உங்கள் கீழ்ப்படிதலின் நிமித்தமாக அங்கு இருப்பீர்கள். முற்பிதாக்கள், தங்களுக்கு வைக்கப்பட்டிருந்தது என்ன என்று அறியாத நிலையிலும், தேவனுடைய வழிகாட்டுதலில் சென்றதன் நிமித்தமாக அங்கு இருப்பார்கள். அதே காரணத்திற்காகத் தேவனுடைய ஊழியக்காரர்களும், விசுவாச வீரர்களுக்கான தேவனுடைய அறைவீட்டில் இருப்பார்கள் என்று நான் நிச்சயித்திருக்கிறேன். விஷயங்கள் காணப்படாதவைகளாக இருந்தபோதிலும், நோவா செய்யும்படி தேவன் கூறியதை அவர் செய்ததன் நிமித்தமாக அவர் அங்கு இருப்பார். அதே காரணத்திற்காக ஒருவேளை நீங்களும் அங்கு இருப்பீர்கள்!

*இருப்பினும் நீங்கள் இரட்சிக்கப்படும்படி தேவனிடத்தில் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளப் போதிய அளவுக்கு விசுவாசத்தை முதலாவது நீங்கள் கொண்டிராத வரையில், விசுவாச வீரர்களின் மத்தியில் நீங்கள் இருக்கலாம் என்று எதிர்பார்க்க முடியாது! நீங்கள் அவருக்குக் கீழ்ப்படியாதிருந்தால், உடனே அதைச் செய்யுங்கள்.*